Aaruthal

எதிர்வரும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப்
பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான
விசேட இடர்கால செயற்றிட்டம் - 2021
மாதிரி வினாத்தாள் – I

12.10.2021

தரம் - 11 | தமிழ்மொழியும் இலக்கியமும் | புள்ளித்திட்டம்

## பகுதி - I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01) | 2 | 11) | 4 | 21) | 1 | 31) | 1 |
| 02) | 3 | 12) | 3 | 22) | 4 | 32) | 3 |
| 03) | 3 | 13) | 4 | 23) | 3 | 33) | 4 |
| 04) | 1 | 14) | 3 | 24) | 1 | 34) | 2 |
| 05) | 2 | 15) | 2 | 25) | 4 | 35) | 1 |
| 06) | 1 | 16) | 1 | 26) | 2 | 36) | 4 |
| 07) | 2 | 17) | 2 | 27) | 1 | 37) | 2 |
| 08) | 4 | 18) | 2 | 28) | 2 | 38) | 2 |
| 09) | 2 | 19) | 3 | 29) | 2 | 39) | 3 |
| 10) | 3 | 20) | 3 | 30) | 4 | 40) | 1 |

(40 x 1 = 40 புள்ளிகள்)

## பகுதி - II

01) (1) சிலிர்த்து + உடலின் + நீர் + அகற்றும் + சிறு + பறவை

(2) தன்வினை = கண்ணன் புத்தகம் படித்தான்
பிறவினை = கண்ணன் புத்தகத்தைப் படிப்பித்தான்

(3) வினைத்தொகை = மலர்ந்த விழி, மலர்கின்ற விழி, மலரும் விழி
உவமைத் தொகை = மலர் போன்ற விழி

(4) பெயரெச்சத் தொடர்

(5) ஒருவர் கூட, ஒருவராயினும்

(6) உவமை அணி

(7) இன்று முழுவதும் நான் தான் பார்த்துக் கொள்கிறேன்

(8) என்னை

(9) தமிழ் வாழ்த்து, வரவேற்புரை, தலைமையுரை, பிரதம விருந்தினர் உரை, நன்றியுரை

(10) தன் பணிகளை செவ்வனே நிறைவேற்றினான் (பெயர்)
வேலை செய்யுமாறு பணித்தான் (வினை)
(பணி - பாம்பு)

(10 x 2 = 20 புள்ளிகள்)

02) (1) கட்டுரை

விளக்கக் கட்டுரை

1) கொவிட் பற்றிய விளக்கம்

2) நோய் ஏற்பட்டால் ஏற்படும் அறிகுறிகள் அதனால் ஏற்படும் விளைவுகள்

3) முன்னெச்சரிக்கையாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்

4) அரசு - சுகாதாரத்துறை, மருத்துவத்துறை, காவற்துறை மக்களுடன் இணைந்து செயலாற்றுதல்

5) தடுக்காதுவிட்டால் பாதிப்பு, மரணம், சமூகஅழிவு, பொருளாதார சீரழிவு, சுற்றுலாத்துறை வீழ்ச்சி, வருமான இழப்பு

(2) பேச்சு

நாட்டின் அபிவிருத்தி / உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்போம் / இறக்குமதியைத் தவிர்ப்போம்.

பொருளாதார முன்னேற்றத்தில் இவற்றின் முக்கியத்துவம்

நமது நாட்டு உற்பத்தியை நுகர்வதனூடாகத்தான மேற்படி தொழில்துறைகள் விருத்தி பெறல்

நமது மனோபாவம், வெளிநாட்டுப் பொருள் மோகம் இவற்றால் எமது விவசாய உற்பத்தித் துறை வீழ்ச்சி, புதிய தொழில்நுட்பத் துறைகளை உருவாக்க முடியாத சூழல் இதனால் பொருளாதார பின்னடைவு

இவற்றைச் சீர்ப்படுத்த விவசாய மற்றும் தொழில்துறை முயற்சிகளுக்குக் கைகொடுத்தல்

(3) உரையாடல்

தலைப்பு = உல்லாசப் பயணிகளின் வருகையால் உண்டாகும் சாதக பாதகங்கள்

உரையாடல் அமைப்பு ஒருவர் கருத்தை உள்வாங்கி தர்க்க ரீதியாக உரையாடல் இருத்தல்

சாதகங்கள்

அன்னியச் செலாவணி அதிகரிப்பு

பயணிகளைக் கவரும் இடங்கள், பிரதேசங்கள் போன்றன அபிவிருத்தி செய்யப்படுதல்

வேலைவாய்ப்புக்கள் பெருகுதல்

நாடு பற்றிய அபிமானம் வேறு நாடுகளிலும் பரவுதல்

பாதகங்கள்

பிறநாட்டுப் பண்பாடு ஊடுருவல், சுதேசப் பண்பாடு சீரழிவு

போதைப்பொருள் பாவனை, பாலியல் துஷ்பிரயோகம், நோய் பரவுதல்

(4) பொருத்தமான சிறுகதை

(25 புள்ளிகள்)

03) சுருக்கம்

இசை, நாடகம் முதலிய கலைகளில் ஈடுபடுவதற்கு ஏற்ற உணர்ச்சியை இயற்கையாய் பயிற்சியாகப் பெற்றிருத்தல்.

இயற்கையால் பயிற்சியால் மக்கள் வேறுபடுகின்றனர்.

கதையைப் படிக்கும் போது கதையின் இன்ப துன்பங்களைத் தாமும் அடைந்து கதை முடிந்த பிறகும் உணர்ச்சி வசமாக நிற்றல்

உணர்ச்சி இல்லாமல் கதையைப் படித்து சிறிதும் மனம் அசையாமல் கலங்காமல் புத்தகத்தை மூடி வைத்தல்

இவ்வேறுபாட்டிற்கெல்லாம் காரணம் அவரவர்களின் மனத்தின் இயற்கை வேறுபாடும் பயிற்சி வேறுபாடும் ஆகும்.

(10 புள்ளிகள்)

04) கிரகித்தல்

(1) படைப்பாளிக்கும் வாசகருக்கும் இடையே தொடர்பை வலுப்படுத்துவதோடு மேலதிக விளக்கங்களை ஏற்படுத்துவதாகவும் திகழ வேண்டும்.

(2) மேலதிக விளக்கமின்மை, படைப்பாளர்கள் விமர்சனத்தைக் கண்டு சீற்றம் கொள்ளும் பக்குவமின்மை.

(3) வாழ்விலிருந்து பிறந்து ஏனையவர்களது வாழ்வைச் செப்பனிட ஏற்றதாகப் படைப்பாக்கம் அமைய வேண்டும்.

(4) அனுபவச் செழுமைகளை உணர்வெழுச்சியுடன் வெளிப்படுத்துவனவாக அமைய வேண்டும்.

மனித உணர்வுக் காட்டின் தீமைகளை எரிப்பன.

(5) விமர்சனக் கலை வளர்ச்சி போதாமை

(5x 2 = 10 புள்ளிகள்)

05) கடித அமைப்பு

முகவரி, உள்முகவரி, விளிப்பு, தலைப்பு, முடிப்பு, ஒப்பம்

✶ பிரச்சினைகள்

கழிவகற்றல் முறையாக மேற்கொள்ளாமை

கண்ட இடங்களில் வீசுதல்

கட்டாக் காலிகள் அவற்றைச் சிதைத்தல்

இதனால்,

சூழல் மாசுறல், துர்நாற்றம், நோய் பரவல், போக்குவரத்து இடையூறு, சூழல் அழகு கெடல்

✶ பிரச்சினைகளைத் தவிர்ப்பது

கழிவுகளை வகைப்படுத்தி உரிய இடத்தில் வைத்தல்

கண்ட கண்ட இடங்களில் போடுவதைத் தவிர்த்தல்

சுற்றாடல் கண்காணிப்பு மேற்கொள்ளல்

அதிகாரிகள் கழிவகற்றும் நடவடிக்கைகளை ஒழுங்காக மேற்கொள்ளல்

தொழிலாளர்களிடம் கடமை உணர்ச்சியை ஏற்படுத்தல்

மீள் சுழற்சிக்குபட்படுத்தல்

**அல்லது**

துண்டுப்பிரசுரம்

அமைப்ப - தலைப்பு, விளிப்பு, உடல் / விடயம் முடிப்பு (வெளியிடும் நிறுவனம், முகவரி, திகதி)

உள்ளடக்கம் - பொலித்தீன் பாவனை இல்லாத இடமில்லை. வேலையை சுலபமாக்க, அழகாக்க பொலித்தீன் உதவுகிறது.

தீமைகள் - சூழல் அசுத்தமடையும், தாவர வளர்ச்சி தடைப்படுதல், விலங்குகள் உண்டு இறத்தல். நீர் தேங்கி நோய் ஏற்படல்

தீர்வு - மாற்றீட்டுப் பொருளை பயன்படுதத்ல், சட்ட நடவடிக்கை

புள்ளித்திட்டம் அமைப்பு - 05

உள்ளடக்கம் - 07

மொழிநடை - 03

**பகுதி - III**

01) (1) அ) நாலடியார்

ஆ) யானை நன்றி மறந்தது. நாய் நன்றிக் குணமுடையது.

(2) அ) பல பொருள்களை விரும்பி நிற்பவர்களுக்கு

ஆ) தாழ்ந்த மனமுடையவர், சோம்பலுடையவர்

(3) அ) செல்வம் / ஏர்

ஆ) சிவபெருமான்

(4) அ) இராமனைக் காட்டுக்கு அனுப்பியமையால்

ஆ) குகனை

(5) அ) சு. தியடோர் பாஸ்கரன்

ஆ) காட்சிப் படிமம், ஒலி, படத்தொகுப்பு

(6) அ) உருவக அணி

ஆ) உடல் - சமூகம்

உயிர் - இலட்சியம்

(7) அ) தலங்களின் / இறைவனின் பழமையான புகழைக் கூறுவது

ஆ) கம்பியூட்டர் பற்றி பூரணமான அறிவுடையவர்

(8) அ) வாசைன மிகுந்த அழகிய வாய்

ஆ) உருவக அணி

(9) அ) வீரமற்றவர்

ஆ) ஆணாதிக்க மேன்மையும் பெண்ணடிமைத் தனமும் / பெண்களின் சுதந்திரமின்மை

(10) அ) சிந்தூரம் - செந்நிறத் திலகம்

சிந்துரம் - குவலயாபீடம் எனும் யானை

ஆ) குவலயாபீடம் எனும் யானையின் கொம்பினை ஒடித்து அதனை அடக்கியமை

(10 x 2 = 20 புள்ளிகள்)

02) (1) அ) கற்றறிந்தோர் முன் கல்வி உரைத்தல்
அறிவுடையோரைச் சேர்தல்
பிறரிடம் இரவாது ஈதல்

ஆ) அறிவிற் சிறந்தோர்
எள்ளளவு (மிகச் சிறியளவு)

(2) அ) ஆம்பல்களும் தாமரை மலர்களும் கமழ்கின்ற வயல்களையுடை நாடு

ஆ) கடுமையான போரில் சினத்துடன் போரிட்டால் இரண்டு பக்கத்தினரும் இறந்து விடுவோம் என்பதன் மூலம் போரினால் ஏற்படும் அழிவை தருமன் விரும்பாத மனநிலை காட்டப்படுகிறது.

(3) அ) மட்டுருக்கினால் அரிவாள் செய்து மாவிலங்கை மரத்தாற் செய்யப்பட்ட பிடியை பொருத்தி வெள்ளித்தகட்டினால் பிடியுடன் அரிவாளைப் பொருத்தி செய்யப்படுகிறது.

ஆ) இளந்தாரிமாரை நாவூறு வராமற் காக்குமாறு

(4) அ) காட்சி மாறுவது, மயங்கித் தெளிதல், இருண்டு தெளிதல்

ஆ) மயங்கித் தெளிதல்
ஒரு காட்சி மங்கி அதே தருணத்தில் அடுத்த காட்சி திரையில் தோன்றுவது

(5) அ) இவ்வுலக வாழ்வை முடித்த ஆன்மாவானது இறைவனுடன் இரண்டறக் கலந்து வாழும் இடம்

ஆ) பிற உயிர்களைத் தமது உயிர்போல மதித்து நடக்கின்ற கொள்கை

(5 x 4 = 20 புள்ளிகள்)

03) அ) குகனின் சிறப்புக்கள்

- ✶ பரதனிடம் அன்பும் மதிப்பும் கொண்டவன்
- ✶ இராமபிரானைப் பெற்ற தாய் கோசலை என்பதை அறிந்து அவளின் பாதங்களில் வீழ்ந்து வணங்குதல்
- ✶ இராமனும் தம்பிமாரும், குகனும் ஒன்று கலந்து நாட்டை ஆட்சி செய்யுமாறு கோசலையாற் கூறத்தக்க சிறப்புடையவன்
- ✶ மலையை ஒத்த திண்ணிய தோள்களை உடையவன்
- ✶ வீரச் செயல்களைப் புரிகின்ற காளை

ஆ) கைகேயியின் கொடுமைக் குணம்

- ✶ தனது கணவன் சுடுகாட்டிற்குச் செல்லவும் தனது மகன் பரதன் துயரக் கடலில் மூழ்கவும் இராமன் காட்டிற்குச் செல்லவும் காரணமானவள்.
- ✶ திருமால் ஈரடிகளால் அளந்த உலகினைச் சிரமப்படாது எளிமையாக தன் மனத்தின் கண் அளந்தவள்
- ✶ துன்பங்கள் யாவற்றையும் உண்டாக்கியவள்.
- ✶ பழியாகிய குழந்தைக்கு வளர்ப்புத்தாய் தனது பாழான தீவினையுடைய வயிற்றில் நீண்ட நாட்கள் தங்கியிருந்த பரதனின் உயிராகிய சுமை குறைந்து தேயும் படி செய்தவள்.
- ✶ துன்பம் இல்லாத முகத்தை உடையவள்

**அல்லது**

அ) ✶ தீப்பற்றினால் மூங்கில் காடானது முழுவதும் அழிந்து விடுவதைப் போல துரியோதனனும் நாங்களும் போர் செய்தால் இரு தரப்பும் அழிந்து விடுவோம்.

✶ சமாதானமாக வாழ்வதற்கு நீ தூது சென்று கூறுவாயாக என கிருட்டினனைக் கூறுதல்

✶ போரொன்று நிகழுமாக இருந்தால் குரவர்களையும் உறவினர்களையும் தம்பிமாரையும் நாம் இழக்க வேண்டிய நிலை ஏற்படும். அவ்வாறு அனைவரையும் இழந்து நாட்டைக் கைப்பற்றி ஆள்வதிலும் பார்க்க காட்டிலே பழம் கிழங்கு, இலை முதலியவற்றை உண்டு உயிர் வாழ்தல் இனிது.

✶ அவமானம் என்பது தமரால் ஏற்படுவதில்லை. பிறரால் ஏற்படுவது. சபையில் ஏற்பட்டது அவமானம் அல்ல.

ஆ) ✶ குருநாட்டை சமாதானமாக கேட்டுப் பெற எண்ணமா? மீண்டும் காட்டில் சென்று துன்பப்பட எண்ணமா? அல்லது போர் புரிய எண்ணமா? என வினவுதல்

✶ வனவாசம் அஞ்ஞாதவாசம் முடித்து திரும்பிவிட்டீர்கள். துரியோதனன் உங்களுக்குரிய பாகத்தை இனியும் கொடாதிருந்தால் போரிலே வென்று இரு பகுதியினரதும் நாட்டை ஒருசேர ஆள வேண்டும்.

✶ நீங்கள் போருக்கு பின்னடைந்து காட்டிற்கு மீண்டும் சென்றால் உலகத்தவர் உங்களை இகழமாட்டரர்களா? நீங்கள் உரைத்த சபதம் பொய்த்து விடாதா? அவ்வாறு நீங்கள் செய்வது அரச தர்மமா? என வினவுவது கிருட்டினனின் போர் முனைப்பைக் காட்டுகிறது.

04) அ) ✶ கம்பீரமான தோற்றம் வீறு கொண்ட பார்வை எண்ணங்களின் வேகம் வீறு கொண்டு சபையை அடைதல்

✶ வேள்வித் தீயினுள் நெய்யைச் சொரிந்த போது அக்கினியின் வாயானது மேலும் அதிகரித்து சுவாலை விட்டு எரிவது போன்று எழுதல்.

✶ ஆண்சிங்கமும் பெரிய காளையும், மத யானையும் பொன்மலையும் நாண நடத்தல்

(7 புள்ளி)

ஆ) நாவலரின் நேர்மை

✶ நல்லூர் கந்தசுவாமி கோவில் பிரச்சினையில் பிராமணருக்காக தான் ஆதரித்து நின்ற போதும் தவறான வழியை நாடாமை

✶ பிறிற்றோவின் நேர்மையற்ற செயலை தந்தி, தபாற் கட்டுக்கள் மூலம் வெளிப்படுத்தியமை

✶ நேர்மையான ஒருவரை சட்ட சபைக்கு அனுப்ப எண்ணியமை

பிறிற்றோவின் நேர்மையீனம்

- ✶ யாழ்ப்பாணத்தில் நாவலருக்கு இருக்கும் செல்வாக்கை உணர்ந்து நாவலர் தனக்குச் சார்பாக இருந்தால் நாவலர் பக்கம் வெற்றி கிடைக்கத்தக்க வகையில் வழக்கை நடத்தி வைப்பதாக கூறியமை
- ✶ தன் கட்சிக்காரர்களான கோயிலாரை ஏமாற்ற துணிந்தமை
- ✶ அந்தரங்க நண்பர்கள், கடிதம், தந்தி என்பவற்றின் ஊடாக தன் திட்டத்தினை நிறைவேற்றி சட்டசபை உறுப்பினராக வர எண்ணியமை

**அல்லது**

அ) ✶ மரத்தின் கீழ் பாய்விரித்து இளைப்பாறுதல்
- ✶ சிறுபிள்ளைகள் ஊஞ்சல் கட்டி ஆடுதல்
- ✶ வெற்றிலை, பாக்கு, கராம்பு, சாதிக்காய் இடித்து உண்ணல்
- ✶ கரத்தை வண்டியில் பயணம் செய்தல்
- ✶ அரிசி இடித்து பலகாரம் செய்தல்
- ✶ நோய் ஏற்பட்டால் கை வைத்தியம் செய்தல்
- ✶ ஆமணக்கம் கொட்டை, உழுவரிசி, நன்னாரிவேர் சேர்த்து எண்ணெய் காய்ச்சி தலைக்கு பூசுதல்
- ✶ அல்லுக்குத்து தோடு, கருகமணிமாலை, செப்புக் காப்பு என்பன அணிதல்
- ✶ சந்தூக்கில் பிரேதத்தை எடுத்துச் செல்லுதல்
- ✶ சாம்பிராணி போடுதல், நேர்த்திக்கடன் செய்தல்
- ✶ சமூகத்தவர் ஒற்றுமையாக செயற்படல்

ஆ) ✶ மஞ்சோனா மரத்தின் கீழ் இருப்பதும் பக்குல் கத்துவதைக் கேட்டு பயந்த காசிம் மூத்தம்மாவின் துணிச்சலைப் பார்த்து தனது ஆளுமைகளை வளர்த்துக் கொள்கிறான்.
- ✶ மூத்தம்மா காரிருளையும் கிழித்துக் கொண்டு குடுகுடுவென நடக்கும் மனோ தைரியத்தைப் பார்த்து தானும் அவ்வாறே நடக்கிறான்.
- ✶ இரத்தம் உறைந்து கால்கள் மரக்கவில்லை. பயம் அவனை பீடிக்கவில்லை. மஞ்சோனா மரத்தின் கீழ் தனியாக இருக்கப் பழகினான். கரு மேகத்தை பார்த்து கரும்பூதமாய் உள்ளுக்குள் ஓடத் தோன்றவில்லை. மூத்திரம் முடுத்தால் மூத்தம்மாவை எழுப்பிக் கொண்டு சிணுங்குவதில்லை. இவ்வாறு காசிம் தன் ஆளுமைகளை வளர்த்துக் கொண்டான்.

05) அ) ✶ மாமரத்தின் கிளைகளில் மந்தியினம் தாவி மாங்கனிகளை பறித்து உண்டு மகிழ்தல்.
- ✶ பூமரத்தின் இலைகளிலே வண்டினங்கள் மோதி மது அருந்தி மகிழ்தல்
- ✶ குயில்கள் இனிமையாக கூவி இரை தேடுதல்
- ✶ பசுங்கிளிகள் மகிழ்ச்சி அடைதல்

✶ மயில்கள் தமது சிறகுகளை அசைத்து ஆடுதல்

✶ கன்றினது உடலை நக்கி பசுக்கள் கனைத்தல்

✶ பனிக்கூட்டத்தை விரட்டும் சூரியனின் வருகை

✶ தகனிமரச் சோலைகள் காணப்படல்

✶ அருவிகள் காணப்படல்

✶ வாழைகுலை சாய்தல்

✶ செழித்து வளர்ந்திரக்கும் செந்நெல் வயல்கள், ஆம்பல் மலர்கள் நிறைந்த குளம் என்பன காணப்படுகின்றன.

ஆ) ✶ வியர்வை சிந்த உழைக்கின்ற விவசாயிகள் உழைத்து உண்கின்ற குலவிளக்காக காணப்படல்

✶ சத்தியத்தால் தலை நிமிர்தல்

✶ இன்பத்திலும் துன்பத்திலும் இன்முகத்தைக் காட்டும் இல்லாள்

06) அ) பொன்னும் நெல்லும் சமப்படுத்தி விற்கின்ற மழை பொய்த்துப்போன பஞ்சகாலத்திலே யார் தடுத்தாலும் தட்டு நீட்டப்படுவதற்கு முன்னரே தேவையறிந்து அன்னதானம் வழங்கிய கொடைவள்ளல் வரத்தினால் பிறந்தவர்.

ஆ) பொருட் பிழைகளை விலக்கி, ஏனையவற்றை நன்கு கற்று கடல் போன்ற நல்ல நூல்களை அறிவுக்கு உணவாக உண்டு அழகான கவிதை பாடும் புலவர் மனத்தே இடித்து முழங்கி மின்னி கவிமழை பொழிய காளமேகம் புறப்பட்டதே

07) அ) தனது இலட்சியத்தின் வழி நின்று ஈடேறியது மட்டுமல்லாது பிறரையும் ஈடேற்றுகிறாள். கற்பெனும் திண்மையுடன் இலட்சியத்தின் படி வாழ்கிறாள். கோவலன் ஊழின் பெருவலியால் காற்சிலம்பை விற்கச் சென்று கள்வனெனக் கொலையுண்டான். அரசன் அநீதி இழைத்த போது அவனை குற்றமற்றவனாக நிரூபித்து தனது இலட்சியத்தில் உயர்ந்து நின்று உயர்வடைந்தாள்.

ஆ) தசரதன் இரண்டு இலட்சியங்களிடையே ஊசலாடுகின்றான். ஒன்று அரசியல் மற்றையது சத்தியம். இவற்றில் ஒன்றைத் தெரிவு செய்வதில் அவன் திண்டாடுகின்றான்.

அரசியற் கொள்கைப்படி மூத்த புதல்வனுக்கு முடி சூடுவதா? அல்லது கைகேயிக்கு கொடுத்த சத்தியவாக்கை நிலைநாட்டுவதா? என்பதே அவையாகும்.

அரசியல் சார்ந்த இலட்சியம் நிலையில்லாதது. இரண்டாவது சத்தியம் சார்ந்த இலட்சியம் நிலையானது எனவே சத்தியத்திலே நிலை நின்று உயிரைத் தியாகம் செய்தான்.